ஸ்ரீ ஹரி:

# மதுரமுரளீ

ஜூலை 2017

வேணு 22; கானம் 12



Delivered by India Post www.indiapost.gov.in

தனி பிரதி *Rs 15/-*

ஆண்டு சந்தா *Rs180/-*

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிகை



வஸந்தோத்ஸவம், மதுரபுரி ஆஸ்ரமம், 31 May - 9 June



# மதுரமுரளி

**வேணு 22 | கானம் 12**


**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண**
**க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**




**முன் அட்டை:**
நந்தவனத்தில்
ஸ்ரீ ஸ்வாமிஜி



**பின் அட்டை:**
ஸ்ரீ ப்ரேமிக ஜகந்நாத
ரத யாத்திரை,
கோவிந்தபுரம்

## பொருளடக்கம்


மதுரமான மஹனீயர் -256..........................5

கேள்வி பதில்..........................................7

நெகிழ வைத்த நினைவுகள்.........................8

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது......9

பக்தி சுகந்தம்.........................................11

பாலகர்களுக்கு ஒரு கதை..........................13

கோவிந்தபுரம் ரத யாத்திரை......................16

மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை.................29

இதிஹாச புராணங்கள்..............................31

சுமைகளை அகற்றுவோம்...........................36

சைதன்ய மஹாப்ரபு.................................37

படித்ததில் பிடித்தது................................40


NO FAME
NO NAME
NO SELF INTEREST
ONLY GOD



# மதுரகீதம்

ராகம்: தேஷ்
தாளம்: ஆதி

**பல்லவி**

நாம தாதா மோக்ஷ தாதா
கலி கல்மஷ ஔஷத தாதா

**சரணம்**

பகவந் நாம ஜப ஸ்மரணம்
ஸர்வ ஸாஸ்த்ர சம்மதம்

நியம சாமான்ய ரஹித
நாம ஜபம் வினா கதிர் நாஸ்தி

பகவந் நாம ஏவ ஸ்வயம் பகவான்
இதி வததி மம குருநாத

# மதுரமான மஹனீயர்

**Dr ஆ பாக்யநாதன்**

இந்த வருடம் 31 மே - ஜூன் 9 மதுரபுரி ஆஸ்ரமத்தில் மாதுரீ ஸகீ சமேத ஸ்ரீ ப்ரேமிக வரதனுக்கு வசந்தோத்சவம் மிகவும் அழகாக ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கொண்டாடினார்கள். தினமும் மாலை வேளையில் மாதுரி சகியுடன் ஸ்ரீ ப்ரேமிக வரதனும் புறப்பாடு கண்டருள, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் தன்னை மறந்து பாடியும் ஆடியும் கொண்டாடினார்கள். அதை தொடர்ந்து தினமுமே எழில் கொஞ்சும் விதமாக விதவிதமான சுகந்த புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சலில் ஸ்ரீ ப்ரேமிக வரதன் மாதுரி சகியுடன் எழுந்தருள யுகள ஸதகம் கீர்த்தனமும் நடைபெற்றது.

அந்த சமயத்தில், 8 ஜூன் அன்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஜெயந்தி உத்சவத்தை ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கொண்டாடினார்கள். அன்றைய தினம் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சிவ பெருமானின் தியாக குணத்தை மிகவும் ஸ்மரித்து நெகிழ்ந்து போனார்கள்.

"ஒருவர் எந்த இடத்திற்குச் சென்றாலும் முதலில் தான் அமர்ந்து கொள்வதற்கு வசதியாக ஒரு இடத்தைத் தேடுவார். ஒருவர் நாற்காலியில் அமர்ந்திருந்தால், நாம் கீழே அமர நமக்குப் பிடிக்காது. அசுத்தமான இடமாக இருந்தாலும் அமர மாட்டோம். நம்மை விட கௌரவம் குறைந்தவர் பக்கத்திலும் அமர மாட்டோம். உலகத்தில் உள்ள எல்லோரும் விரும்பத் தகாத, நினைத்துப் பார்க்கக்கூடப் பிடிக்காத ஒரு இடம் இருக்குமானால் அதுதான் சுடுகாடு. அந்த சுடுகாட்டையே பவித்திரமான

இடமாக ஆக்கிக்கொண்டு ஒருவர் அமர்ந்திருக்கின்றார். பொதுவாக எல்லோரும் முத்து, பவழம், வைரம், வைடூர்யம் என்று அணிகலன்கள் அணிந்துகொள்ள ஆசைப்படுவார்கள். பார்ப்பதற்கு பயங்கரமாக, தொடுவதற்கு அருவெறுப்பாக இருப்பது கபாலம். அதைத்தான் மாலையாகப் போட்டுக்கொண்டுள்ளார். சந்தனம், பன்னீர், ஜவ்வாது, கஸ்தூரி என்று பூசிக்கொள்ளாமல் சுடுகாட்டுச் சாம்பலை ஆனந்தமாகப் பூசிக்கொள்கிறார். வாசனையே இல்லாத டிசம்பர் பூ, கனகாம்பரம், வாடாமல்லி, கோழிக் கொண்டை இவைகளுக்குக்கூட ஒரு விலை வந்துவிட்டது. ஆனால், ஊமத்தம்பூ, தும்பைப் பூ, எருக்கம்பூ என்று யாருமே விரும்பாத பூக்களை அவர் சூடிக்கொண்டுள்ளார். கசப்பான பதார்த்தத்தைக்கூட யாரும் சாப்பிட விரும்பமாட்டார்கள். அதிலும் தனக்குப் பிடிக்காத உணவுப் பொருளை யாரும் சாப்பிட முன்வரமாட்டார்கள். விஷத்தை யாராவது சாப்பிட முன்வருவார்களா? அதுவும் கேட்டு வாங்கி சாப்பிடுவார்களா? எனக்கென்று நீங்கள் ஒன்றும் தனியாக இடம் தரவேண்டாம். நல்ல இடத்தில் எல்லாம் நீங்கள் உட்காருங்கள். நான் உங்களுக்கு தொந்தரவில்லாமல், நீங்கள் உட்காராத இடத்தில் நான் உட்கார்ந்து கொள்கின்றேன். உங்களுக்கு வேண்டாதது சாம்பல், கபாலம், விஷம் எல்லாவற்றையும் என்னிடம் கொடுங்கள், நான் அதை ஆனந்தமாக ஏற்றுக் கொள்கின்றேன். இப்படி யார் சொல்வார்? இப்படி ஒரு தியாகமா? அதனால்தான் பரமேஸ்வரனே தியாகராஜன். அவரை பக்தி செய்து நமக்கும் கொஞ்சமாவது அந்த தியாக புத்தியும், வைரக்யமும் வரட்டும்.”

மஹா பெரியவாள் ஜெயந்தி அன்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் பரமேஸ்வரனைப் பற்றி ஸ்மரித்த ரசமான விஷயங்களை உங்களுடன் பகிர்ந்துள்ளேன்.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள்

**கேள்வி: நான் கடந்த 15 வருடங்களாக பாகவத பாராயணம் செய்து கொண்டிருக்கிறேன். பூஜை செய்கிறேன். நாமம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இவை அனைத்தும் தினமும் சுமார் 8 முதல் 10 மணி நேரம் செய்து வருகின்றேன். அப்படியிருக்க, எனக்கு ஏன் கனவிலாவது பகவத் தரிசனம் ஏற்படவில்லை? சரி, பகவத் தரிசனம்தான் இல்லை, கனவாவது நல்ல கனவாக இருந்தால் பரவாயில்லை. யாரோ மிரட்டுவதுபோல, மோசமான கனவுதான் வருகின்றது. அந்த அளவிற்குக்கூட எனக்கு ஒரு முன்னேற்றமும் காணோமே..**

**பதில்:** உங்களைப் போன்று பல பேர் சாந்நித்யம் பொருந்திய கோவில்களில் பூஜை செய்கின்றனர். பல பக்தர்கள் டிக்கெட் பெற்றுக்கொண்டு அர்ச்சனைக்கு வருவதால், அவர்கள் பல லட்சார்ச்சனை, கோடி அர்ச்சனை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். அதே போல், சிலர் professionalஆகா பஜனை செய்கிறார்கள். பஜனையில் ஆடிப்பாடுகிறார்கள். சிலர் சரளமாக ஆன்மீக சொற்பொழிவாற்றுகிறார்கள். உங்கள் கேள்வி இவர்களுக்கும் பொருந்தும். ஒரு விளையாட்டுத்தனம், பிறரை பரிகாசம் செய்யும் தன்மை, பிறரைக் கிண்டல் செய்வது என்று இருந்துகொண்டு ஒரு தீவிரத்தன்மை இல்லாமல் சாபல்ய பக்தி (அதாவது பக்தியைப் பார்த்தவுடன் பக்தி) செய்வது, வம்பு பேசுவது, சாபல்யத்தை ஜெயிக்காமல் இருந்துகொண்டு பக்தி செய்தால் அல்ப பலன்தானே ஏற்படும்? பூரணமான பலன் ஏற்படாது. ஸ்ரீ வாசுதேவ தாத்தாவைப் போன்று சில மகான்களைப்பற்றி நாம் கேள்விப்படுகிறோம். மர்கட (குரங்கு) நியாயம் போல், “48 நாட்களில் பகவான் கனவில் வரவேண்டும் என்றால், வந்தே ஆகவேண்டும்” என்று, அவர்களைப்போல் திடமாக உட்காரவேண்டும். நிறுத்தவே கூடாது. அப்படி பக்தி சாதனையை மனதில் நிறுத்தினால்தான் பூர்ண பலன் ஏற்படும். புராண காலத்திலிருந்து ஒரு உதாரணம் சொல்லவேண்டும் என்றால் த்ருவன் போல, தெய்வீகத்தில் பிடிவாதம் இருந்தால்தான் பூர்ண பலன் சித்திக்கும்.

# நெகிழ வைத்த நினைவுகள் 1

ஸ்ரீ ஸ்வாமிஜி

ஒரு முறை திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலுக்குச் சென்றிருந்தேன். கோவிலின் உட்பிரகாரத்தில் ஒரு இடத்தில் தனியாக அமர்ந்திருந்தேன். அருணாசலேஸ்வரர், பகவான் ரமணர், சேஷாத்ரி ஸ்வாமிகள், யோகி ராம்சுரத்குமார், துக்காரம் ஸ்வாமிகள், ஞானானந்தர், பூண்டி மஹான், இப்படியாக என் சிந்தனை ஓடிக்கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு கிராமத்துப் பெண்மணி என்னைத் தேடி வந்து வணங்கிவிட்டு நின்றார். நானும் சிரித்துவிட்டுத் தலையசைத்தேன். அவள் கிளம்பவில்லை. அவள் கிளம்பலாம் என்பதுபோல் மீண்டும் தலையசைத்தேன். அப்பொழுதும் அவள் கிளம்பவில்லை. ‘‘என்ன சாமி, என்னை கிளம்ப சொல்ற? உன் வாயால எவ்வளவு தரம் ராம நாமம் சொல்லியிருப்ப, அந்த வாயால என்னைப் பாத்து நீ நல்லா இருப்பாய் என்று சொல்லு சாமி. நான் போயிடறேன்’’ என்றாள். அவள் சொன்னதைக் கேட்டவுடன் என் நெஞ்சம் நெகிழ்ந்துவிட்டது. அப்படியே சொல்லி, கையிலிருந்த அருணாசலேஸ்வரர் பிரசாதத்தைக் கொடுத்தேன்.



**ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் சம்பாஷனைகளிலிருந்து,**
**Dr ஆ பாக்யநாதன்**

வெற்றிக்கு அடிப்படையானது, இலக்கை நோக்கிய ஒருமுகப்பட்ட சிந்தனையாகும். எப்படிப்பட்ட துறையாக இருப்பினும் ஒருமுகப்பட்ட சிந்தனை உடையவனே வெற்றியை அடைந்துள்ளான். இது உலகிய சாதனைகளுக்குக் கூடப் பொருந்தும்

நமது இதிஹாசங்களும் புராணங்களும், நமது பிறப்பின் நோக்கமே தன்னைத் தான் உணர்வது அல்லது கடவுளின் தரிசனம் என்று வலியுறுத்துகின்றன. மஹாத்மாக்கள் அந்த நோக்கத்தை எட்டுவதற்கான ஒருமுகப்பட்ட சிந்தனை மற்றும் அதற்கான முயற்சிகளிலும் தவத்திலும்தான் எப்போதும் ஈடுபடுகிறார்கள்.

எப்படி ஒரு தெய்வீகமான சூழ்நிலையிலும் ஒரு சாதாரண மனிதன் தெய்வீகத்தை உணராமல், உலக விஷயங்களிலேயே சிந்தனையை செலுத்துகிறானோ, அதுபோல, மஹாத்மாக்கள் உலக விஷயங்களில் கூட இறைவனையே பார்க்கிறார்கள். இவ்வுலக விஷயங்களிலிருந்து விடுபட்டு, எப்படி இறைவனைப் பற்றிச் சிந்திக்கவேண்டும் என்பதை நமக்கு அழகாகச் சொல்லிக் கொடுக்கவும் செய்கிறார்கள்.

## அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது

நம் ஸ்வாமிஜி அவர்கள் பகவான் ரமண மகரிஷியின் வாழ்க்கையிலிருந்து ஒரு உதாரணத்தை சொல்வதுண்டு. அமெரிக்காவைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் மக்கள் தொகையை குறைப்பதற்காக கருத்தடை பற்றி பிரச்சாரம் செய்து வந்தார். ரமண மகரிஷியிடம் வந்து அது பற்றிக் கேட்டார். அவர் மிக அழகான முறுவலுடன், “இறப்பைத் தடுக்கமுடியாவிட்டால், பிறப்பை எப்படி தடுக்க முடியும்? முதலில் பிறந்திருப்பவர் யார் என்று அறிவோம்” என்றார். இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டும் என்றால், கருத்தடை மூலம் இதுவரை பிறக்காதவர்கள் பிறப்பதை தடுக்க விஞ்ஞானம் முயற்சிக்கிறது. இது தாற்காலிகமானது. ஏற்கனவே பிறந்துவிட்டவர்கள் ஆத்ம விசாரம் செய்து தன்னைத் தானே உணர்ந்துவிட்டால் மீண்டும் பிறவியே கிடையாது. அதுவே நிரந்தரமானது. அதையே தான் சொல்லிவருவதாக மஹரிஷிகள் உணர்த்தினார்கள்.

விஞ்ஞானத்தில் மிகுந்த ஆர்வம் கொண்ட ஒருவர் ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் ஒரு விஞ்ஞான ஆராய்ச்சியின் குறிப்பேட்டைக் காட்டினார். பூமியில் சிறிது சிறிதாக நீர்வளம் மற்றும் அனைத்து வளங்களும் குறைந்துகொண்டே வருவதால், மனிதர்கள், நூறு ஆண்டுகளில் மற்ற கிரகங்களில் சென்று வாழ வேண்டியிருக்கும் என்று ஒரு பிரபல விஞ்ஞானி சொல்லியுள்ளதாக அந்த குறிப்பில் சொல்லப்பட்டிருந்தது. ஒரு அழகான புன்னகையுடன் ஸ்ரீ ஸ்வாமிஜி, "இம்மாதிரியான ஆராய்ச்சிக் கணிப்புகள் உண்மையாக இருக்கட்டும் அல்லது இல்லாமல் போகட்டும். அதைப் பற்றி ஆன்மசாதகர்கள் அலசுவதால் ஒரு பலனும் இல்லை. இந்த விஷயத்தை நாம் இப்படி எடுத்துக்கொள்ளலாம். தற்போது, இறைவனின் அளப்பரிய கருணையால் இந்த பூமியில் நமக்கு மனிதப்பிறவியும், வாழ்வதற்குத் தேவையான எல்லா வசதிகளும் கிடைத்திருக்கின்றது. அடுத்து ஒரு பிறவி எடுத்தால் சூழ்நிலை எப்படி இருக்குமோ தெரியவில்லை. அதனால், நாம் இந்தப் பிறவியிலேயே இறைவனை அடையவேண்டும் என்று நிச்சயம் செய்துகொள்வோம். மறுபடியும் பிறவாமல் இருக்க உறுதி பூணுவோம்." என்றார்.






# பக்தி சுகந்தம்

**ஸ்ரீ M.K. ராமானுஜம்**

...பக்தியை அதனால் ஏற்படும் ஆனந்தத்திற்காகச் செய்பவருக்கும், ஒரு பயனை எதிர்ப்பார்த்து பக்தி செய்பவருக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. பயனை எதிர்ப்பார்த்து பக்தி செய்பவர் அவர் எதிர்பார்த்த பயன் கிட்டவில்லை என்றால் பக்தி செய்வதை நிறுத்திவிடுவார். ஆனால், பக்தி செய்வதிலேயே உள்ள ஆனந்தத்தை உணர்பவருக்கோ அதை நிறுத்த இயலாது. சுவாசிப்பதை யாரவது நிறுத்த முடியுமா? உண்மையான பக்தர்களுக்குப் பக்தி செய்வது என்பது சுவாசிப்பது போன்ற இயல்பு.

பக்திரஸத்தையும் அதன் நறுமணத்தையும் விளக்கும் வண்ணம் நிறைய கிரந்தங்கள் உள்ளன. இத்தகைய கிரந்தங்களுக்கு என்ன அவசியம் வந்தது? ஒருவர் நன்றாக அலங்கரித்துக்கொள்ள விரும்பினால், அதற்கான வல்லுனரிடம் செல்வார். ஒரு 5 நட்சத்திர உணவு விடுதிக்கு நாம் ஏன் செல்கிறோம்? ஏனெனில், அங்கு சமைப்பவருக்கு உணவை சமைக்கும் நுணுக்கமும், அதை பரிமாறும் கலையும் நன்கு தெரியும். நம் வீட்டை அலங்கரிக்கும் வேலையை நாம் கலை வல்லுனரிடம் ஏன் ஒப்படைக்கிறோம்? ஏனெனில், அவர் அந்த வேலையில் வல்லுனர் என்பதால், இருக்கும் இடத்தை எப்படி அழகாக அலங்கரிக்க வேண்டும் என்பது அவருக்குத் தெரியும். ஒருவர் சமையல் குறிப்புகளைத் தருவதும், ஒருவர் நாம் உடுக்கும் உடைகளைப் பற்றி அபிப்ராயங்களும் அறிவுரைகளும் சொல்வதும் எதற்காக? அது நமது செயல்திறனை அதிகரித்து மேலும் நம்மைச் சிறப்புறச் செய்வதற்காக அல்லவா? அது போலவே, பக்தி விஷயமான கிரந்தங்கள், நமக்கு பக்தியை எப்படிச் செய்யவேண்டும், அதை ரஸமாக எப்படி அனுபவிக்க வேண்டும், பக்தியை மகிழ்வோடு செய்வது எவ்விதம்? எப்படிச் செய்தால் நமது பக்தி இன்னும் மெருகேறும்? என்பதை விளக்குகின்றன.

இப்போது, பக்தியினால் ஏற்படும் ஆனந்தத்திற்கும், பக்தியின் பயனுக்கும் வித்தியாசம் புரிந்திருக்கும். சிறந்த பக்தர்கள் எப்போதுமே பக்தியின் பலனைப் பற்றி யோசிப்பதே இல்லை. பலன்கள் எல்லாம் எப்போதும் உலக விஷயங்களைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டு அதில் உழலும் சாதாரண மக்களுக்கான விஷயம். அவ்வகைப்பட்ட மனிதர்கள், பகவானான ஸ்ரீ ப்ரேமிகவரதனின் முன்பாக சிறிது நேரம் அமரும்போது கூட; தூப தீப ஆராதனைகள் நடக்கும் நேரத்தில் கூட உலக விஷயங்களை மறக்க முடியாமல் அவர்கள் மனதிற்குள் தங்கள் விஷயங்களில் மூழ்கிவிடுகிறார்கள்! ஒரு பெரிய தெய்வீக சக்தியின் முன்பாக அவர்கள் ஸ்தூலமாக இருக்கும்போது கூட, அவர்களது மனம் உயர்ந்த நிலைகளுக்குச் செல்ல முயல்வதில்லை. அவர்கள் பகவானின் திருமுகத்தையோ, மயில் பீலி, குழல் ஆகியவற்றைப் பற்றிச் சிந்திக்கலாமே? அவர்களது உடல் ஸாக்ஷாத் கண்ணனின் முன்பாகவே இருந்தாலும், மனம் வேறெங்கோ அலைந்துகொண்டிருக்கிறது!

மனதிற்கு ஸ்தூலம், சூட்சுமம் என்று பல்வேறு நிலைகள் உள்ளன. உங்களது மனம் மேல் நிலைகளுக்குச் செல்லச் செல்லத்தான் இறைவனை அடிக்கடி சிந்திக்கமுடியும். மனதில் முன்னேற்றம் இல்லாத பொழுது, அடிக்கடி இறைச் சிந்தனை ஏற்படுவது சாத்தியமில்லை.

மனதை எப்படி உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்வது? அதற்குத்தான் விடாமல் நாமம் சொல்லவேண்டும். தொடர்ந்து பல மணிநேரங்களுக்கு நாமம் சொல்லவேண்டும். பக்தியோடு சொல்கிறோமா இல்லையா என்பது முக்கியமில்லை, நாமத்தைச் சொல்லவேண்டும் அவ்வளவுதான். ஒரு நாமம் சொல்லும் இயந்திரத்தைப் போல முடிந்தால் ஒரு தெய்வீகமான இடத்தில் அமர்ந்துகொண்டு சொல்லவேண்டும். இப்படிச் சொல்வதனால், மனமானது உயர்ந்த நிலைகளுக்குச் சென்று வேறு பல முன்னேற்றங்களை அடையும்.

...தொடரும்

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

ஒரு தாயானவள், தன் குழந்தை ஓடி ஆடி விளையாடிக் களைத்து, விளையாடியது போதும் என்று அலுத்துப் போய், எப்பொழுது தானாகத் தன்னிடம் வருகிறதோ அப்பொழுது வரட்டும் என்று, பொறுமையாகக் காத்துக் கொண்டிருப்பாள்! அது போல, ஜீவனானவன் இந்த உலக வாழ்க்கை போதும் என்று அலுத்துப் போய், அவனிடம் வரும் வரையில், எவ்வளவு பிறவிகள் வேண்டுமானாலும் பிறக்கட்டும், எப்படி வேண்டுமானாலும் பிறக்கட்டும், எங்கு வேண்டுமானாலும் பிறக்கட்டும் என்று இறைவன் பொறுமையாகக் காத்திருக்கின்றான். இதுவல்லவோ அவனது கருணை!

மஹாபாரதத்தில் பல அற்புதமான கருத்துக்கள் உள்ளன. அவற்றில் ஒன்றைப் பற்றி குருமகராஜ் பேசி கொண்டிருந்தார்கள்.

கௌரவர்களின் குரு துரோணாச்சாரியார். அவர்தான் பாண்டவர்களுக்கும் குரு. குரு துரோணருக்கு அனைத்து சீடர்களும் சமம்தான். எனினும், அர்ஜுனன்தான் ஆச்சாரியருக்கு மிக்க பிரியமான சீடன். அவனை உலகின் சிறந்த வில்லாளியாக்கி, அவனுக்கு இணையாக யாருமில்லை என செய்வதாக அவர் வாக்கு கொடுத்திருந்தார்.

பழங்காலத்தில் அரச பரம்பரையினருக்கு கற்றுத் தரப்படும் போர்ப்பயிற்சி பிறருக்குக் கற்றுத் தர தடை இருந்தது. தேச பாதுகாப்பின் பொருட்டு, இளவரசர்கள் போல் சாமான்யர் வேறு யாரும் பலம் பெற்று விடக் கூடாது என்பதுதான் அதன் உள்நோக்கம்.

ஏகலவ்யன் வேடர் குலத்தவன். அவன் துரோணரை அணுகி தனக்கு வில்வித்தையை கற்றுத்தர பணிவுடன் கேட்கிறான். அரச நியதிகளுக்குக் கட்டுப்பட்டு ஆச்சாரியர், அவனை சீடனாக ஏற்க மறுத்து விடுகிறார்.

ஆனால், ஏகலவ்யன் மனம் தளரவில்லை. அவன் துரோணர் போல ஒரு முழு உருவ சிலையை செய்து, அதில் ஆச்சாரியர் இருக்கின்றார் என்றெண்ணி, அனுதினமும் பக்தி சிரத்தையுடன் வழிபட்டு வந்தான். அந்த உருவத்தை ஒருமுகப்பட்ட மனத்துடன் பக்தி செய்து அஸ்திரங்கள் பயில ஆரம்பித்தான். காலக்ரமத்தில் துரோணருக்கு என்னென்ன வித்தைகள் தெரியுமோ அத்தனையும் அவனுக்கும் தெரிந்துவிட்டது. தற்செயலாக துரோணர் அவனை சந்திக்க நேரிடும்போது தனக்குத் தெரிந்திருக்கக்கூடிய அத்தனை அஸ்திர



# பாலகர்களுக்கு ஒரு கதை

வித்தைகளும் அவனுக்குத் தெரிந்திருப்பதைக் கண்டு வியப்படைந்தார். அவனுக்கு அவையெல்லாம் எப்படித் தெரிந்தது? என்று கேட்க, அவன் தான் எழுதிவைத்து ச்ரத்தையுடன் பூஜை செய்துவரும் துரோணரின் சித்திரத்தை காண்பிக்கின்றான். துரோணர் அதைக்கண்டு மேலும் வியப்படைந்தார்.

துரோணருடைய உருவத்தை வரைந்து பூஜை செய்திருக்கின்றான் ஏகலவ்யன். ஆனால், அது துரோணருக்கே தெரியவில்லை என்று இந்த சந்திப்பில் நன்றாகத் தெரிகின்றது. துரோணரும் மானசீகமாக எதுவும் அருள் புரியவில்லை என்றும் தெரிகின்றது. பின் எப்படி ஏகலவ்யனுக்கு எல்லா அஸ்திரவித்தைகளும் தெரியவந்தது?

இங்கு நாம் ஒன்றை நன்றாகக் கவனிக்க வேண்டும். ஏகலவ்யன் செய்த சிரத்தையுடன் கூடிய ஒருமுகமான குரு பக்தியால், தெய்வம் மகிழ்ந்து அவன் வேண்டியதை அவனுக்கு அருளியது என்பதுதான் உண்மை. இதிலிருந்து நமக்கு என்ன புரிய வருகின்றது என்றால், நாம் எந்தச் செயலை செய்தாலும் அதற்கான பலனைத் தருவது ஈஸ்வரன்தானே தவிர, அந்தச் செயலே ஒரு போதும் பலனைத் தந்து விடுவதில்லை.


ஒரு பெரிய தனவந்தருக்கு உடல் முழுவதும் வியாதி. அவரால் ருசியான உணவுகளைச் சாப்பிட முடியவில்லை. எழுந்து நடக்க முடியவில்லை. காது சரியாகக் கேட்கவில்லை. கண்கள் சரியாகத் தெரியவில்லை. சரியாகப் பேச முடியவில்லை. இப்படி உள்ள அவரிடம் ஒருவர் வந்து, "உங்களுக்கு என்ன சார். நீங்கள் பெரிய தனவந்தர்" என்றால், "அவர் என்னீடம் தனம் இருந்து என்ன பயன்?", என்பார். அதுபோல் நிர்குண ஸமாதி கைகூடிவிட்ட ஞானீக்கு இந்த உலகத்தால் ஆகப்போவது ஒன்றுமில்லை. ஆகவே அவனுக்கு இந்த உலகம் மித்யை என்பது சரியே.

- ஸ்ரீ M.K. ராமானுஜம்

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**



# கோவிந்தபுரம் ரத யாத்திரை

- ஸ்ரீ M.K. ராமானுஜம்

கோவிந்தபுரத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், சைதன்ய குடீரம் என்ற ஸ்தாபனம் ஏற்படுத்தி, அங்கு அகண்டமாக மஹாமந்திர கீர்த்தனம் நடத்தி வருவது நாம் அனைவரும் அறிந்ததே! அங்கு கோயில் கொண்டுள்ள ஸ்ரீ பலபத்ரர், ஸ்ரீ சுபத்ரா மற்றும் ஸ்ரீ ஜகன்னாத ஸ்வாமி மூவரும், பூரியில் நடப்பதுபோல ஒரு ரதயாத்திரையை தாங்களும் அனுபவிக்கத் திருவுள்ளம் கொண்டார்கள் போலும். நான்கு வருடங்கள் முன் ஆரம்பித்த ரத யாத்திரை, ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஆக்ஞையின் பேரில் இந்த வருடம் ஜூன் 25ம் தேதி ஸத்குரு க்ருபையாலும், ஸ்ரீக்ருஷ்ணக்ருபையாலும் கோவிந்தபுரத்தில் மிக விமரிசையாக நடந்தது.

ரதயாத்திரைக்காகவே அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, துபாய், மஸ்கட், அபுதாபி, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேஷியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து GOD ஸத்சங்கத்தைச் சேர்ந்த அன்பர்கள் ஒரு நாள் முன்பாகவே வந்து சேர்ந்தனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த பல்வேறு GOD நாமத்வார் மற்றும் ஸத்சங்கங்களிலிருந்து அன்பர்கள் ரதயாத்திரை தினத்தன்று வந்து குழுமினர். கர்நாடகா, கேரளா, ஆந்திரா, மும்பையிலிருந்தும் பக்தர்கள் வந்திருந்தனர்.

ரதயாத்திரையின் முன்தினமே வெளிநாட்டைச் சேர்ந்த GOD அன்பர்களும், தமிழ்நாட்டைச் சேர்ந்த GOD அன்பர்களும் சைதன்ய குடீரத்தில் குளிரக் குளிர மஹாமந்திர கீர்த்தனம் செய்தனர். ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை! இவர்கள்

செய்த இந்த மஹாமந்திர பஜனையைப் பற்றி ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அடுத்த நாள் பேசுகையில், 'இவர்கள் அப்படி நாமா சொன்னார்களே!! இதுபோல் என்னால் கூட சொல்ல முடியாது போல் இருக்கிறதே! இவர்கள்தாம் நமக்கு பரம உபகாரி! பரம உபகாரிகளைக் கண்டு கொண்டேன்'' என்றார். மேலும் மெல்லிய குரலில் கூறலானார், ''நாம் சேமித்து வைத்துள்ள நிதியை சிலரிடம் கொடுத்தால் அதைச் சிலர் தொலைத்துவிடலாம். வீண் செலவு செய்து விடலாம், சுயநலத்திற்காகவோ, பொது நலத்திற்காகவோ செலவழித்துவிடலாம். ஒரு நல்ல 'Mutual Fund' இல் போட்டால், அது பல மடங்காகப் பெருகி வளர்வதுபோல் சிலரிடம் நாம் செய்யும் நாமப்ரசாரம் பல மடங்குகளாகப் பெருகி நம்மிடமே வந்து சேர்கின்றது. நம்முடைய காது குளிர, மனம் ஆனந்தமடைய, நாமம் சொல்லும் இவர்களே நமக்கு பரம உபகாரிகள்!'' என்று உள்ளம் உருகச் சொன்னார்கள்.

ரதயாத்திரை நாளும் வந்தது. பொழுது புலர்வதன் முன்னமே 2000க்கும் மேற்பட்ட அன்பர்கள் காலை 5:30 மணியிலிருந்தே மஹாமந்திர கீர்த்தனம் செய்ய ஆரம்பித்தனர். அனைவரின் நெற்றியிலும் கோபி சந்தனம் மிளிர, கழுத்தில் துளசிமாலை தவழ, கைகளில் சிப்ளாக்களும் ஜால்ராக்களும் துணை கோஷம் போட, அனைவரின் கால்களும் இசைக்கேற்ப ஆட, மதுரமான மஹாமந்திர கோஷம் விண்ணைப் பிளந்தது. அழகிய ஸ்ரீ ஜகன்னாதர், ஸ்ரீ பலபத்ரர், மற்றும் ஸ்ரீ சுபத்ராவின் மூர்த்திகள் ரதத்தில் கோவில் கொண்டு, அவர்களும் ரதயாத்திரைக்கு ஆவலுடன் திரையின் பின்னால் காத்திருந்தனர். பக்தர்களும் கையில் வண்ணக் கொடிகளைத் தாங்கிய வண்ணம் நாம கீர்த்தனம் செய்ய, கொடிகளும் நாமத்திற்கேற்பக் காற்றில் ஆடிய வண்ணம் பறந்தன.

காலை 8:30 மணி இருக்கும். வந்து சேர்ந்த பக்தர்களிடையே ஒரு ஆனந்தப் பரபரப்பு! ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் கீர்த்தனத்தின் மத்தியில் திடீரென கண்ணன் ஆவிர்பவித்ததுபோல், கம்பீர நடைபோட்டு சைதன்ய குடீரத்துக்குள் விஜயம் செய்தார்.

பக்தர்கள் செய்துவந்த மஹாமந்திரத்தை ரசித்தபடியே, மலர்ந்த தாமரை போன்ற நயன யுகளத்தால் அனைவரையும் அனுக்ரஹித்த வண்ணம் வந்து, ஸ்ரீ ஸ்வாமிஜியின் பூஜையை ஏற்றுக் கொண்டு, ஸ்ரீ ஜகன்னாதர், பலபத்ரர், சுபத்ராவின் அர்ச்சைகளுக்கு தீபம் காட்டி ஆசனத்தில் அமர்ந்தார். அரை மணிநேரம் நாம கீர்த்தனத்தின் மகிமையை அழகாகவும், அழுத்தமாகவும் உபன்யாசம் செய்தார். உபன்யாசம் பூர்த்தி ஆனதும், ரதத்தில் எழுந்தருளியுள்ள அர்ச்சைகளுக்கு பூஜை செய்து, ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவும் ஸ்ரீ ஸ்வாமிஜியும் தாமே ரதத்தை இழுத்து யாத்திரையைத் தொடங்கி வைத்தனர். பிறகு

நடந்தவைகள் வார்த்தைகளில் அடங்குமோ? ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தம்தானே! மஹாமந்திரத்தை ஒரே மாதிரியாக 2000பேர் கீர்த்தனம் செய்தால் எப்படி இருக்கும்! அதுவும் நகரகீர்த்தனமாக இருந்தால் எப்படி இருக்கும்! அதில் ரதோற்சவமும் சேர்ந்தால்? எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல் ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவும் ஸ்ரீ ஸ்வாமிஜியும், கரங்களைத் தூக்கி புன்முறுவலுடன் சேர்ந்து மஹாமந்திர கீர்த்தனம் செய்தால், அது எப்படி இருக்கும்! வாக்கினால் சொல்லிவிடக்கூடிய அனுபவமா அது! அங்கு பங்கேற்ற அன்பர்களே பாக்கியவான்கள்! ரதமோ, பூரி ஜகன்னாதரின் ரதம் எப்படியிருக்குமோ அப்படியே அலங்கரிக்கப்பட்டிருந்தது. இருவர் சாமரம் வீச, ஒய்யாரமாக ரதத்தில் தவழ்ந்து வந்தார் ஜகன்னாதர்.

இடையிடையே 'ஹரி போல்!', 'கௌர் நிதாய்!', 'ஹரி போல்!', 'ஜெய் ஜகன்னாத்!' என்ற கோஷங்கள் இடிபோல ஒலித்தன. சைதன்ய குடீரத்திலிருந்து புறப்பட்டு சுமார் ஒன்றரை மணி நேரம் நான்கு வீதிகளைக் கடந்து ஜகன்னாதர் மீண்டும் சைதன்ய குடீரம் வந்து சேர்ந்தார். இவ்வளவு விரைவில் முடிந்துவிட்டதே என்ற ஏக்கத்துடன் அனைத்து பக்தர்களும் மஹாமந்திரம் சொல்லியபடியே பிரசாதம் ஸ்வீகரித்துக்கொண்டனர். ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களும் தியான குடீரத்திற்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி மஹாமந்திரம் பாடியபடியே நடந்து வந்தார்கள். வந்திருந்த பக்தர்களின் நாமருசி கண்டு நெகிழ்ந்து போனார்கள். ரதயாத்திரை பூர்த்தியனதும், ஸ்ரீஸ்வாமிஜி திருநாங்கூர் திராவிட வேதபாடசாலைக்குச் சென்றார்கள். காரில் செல்லும்போது, "இரண்டு நாட்கள் முன்பாக ரோஹிணிக்கு சேங்கனூர் சென்றிருந்தேன். அப்போது சேங்கனூர் ஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில் நாமம் சொல்லிக் கொண்டிருந்தோம்" என்றார்கள். 'தாங்கள் பெருமாளையே பார்த்துக் கொண்டிருந்தீர்களாமே? அடியேனுக்கு சொல்லலாம் என்றால்... என்ன நினைத்துக் கொண்டிருந்தீர்கள்?' என்று கேட்டேன்.

ஸ்ரீ ஸ்வாமிஜியும் கருணையோடு தொடர்ந்தார், "பெருமாள் சன்னதியில் நின்றால் கூட, மனது எங்கேயாவது ஓடிக்கொண்டேதான் இருக்கிறது. பெருமாளாக பார்த்து கருணையால் மனதை அடக்கினால்தான் உண்டு. நாம் எவ்வளவுதான் சாதனைகள் செய்தாலும், கோடி ஜபம் செய்தாலும் எத்தனை முட்டி மோதிக்கொண்டாலும், எவ்வளவு வருடங்கள் சாதனை செயதாலும், அது எப்படிப்பட்ட சாதனையாக இருந்தாலும், ஒரு குரு அல்லது தெய்வத்தின் க்ருபை இல்லாமல், எள்ளளவும் பக்தி சித்திக்காது", என்றார்கள்.

மேலும், ‘‘ஒரு சிறு குழந்தை தன் நிர்வாணத்தை தன் தாயிடம் எப்படி மறைக்கவே முடியாதோ அதுபோல் ஒரு சிஷ்யனும் குருவிடம் எதையும் மறைக்கவே முடியாது!’ என்றார். ‘ப்ரபோ! நீ எனக்கு எவ்வளவோ க்ருபை செய்துள்ளாய்! பாரத புண்ய பூமியில் ஜன்மா கொடுத்துள்ளாய்; சத்சங்கத்தை கொடுத்துள்ளாய்; உலகில் எவ்வளவோ மக்களை பார்க்கின்றேன். வியாதிகளால் கஷ்டப்படுகிறார்கள்; குடும்ப கஷ்டங்களால் அவதிப்படுகிறார்கள். நீயோ எவ்வளவோ அனுக்ரஹம் செய்துள்ளாய்!! அந்த க்ருபைக்கு நான் நன்றி உள்ளவனாக இருக்க வேண்டும். நான் நன்றி கெட்டவனாக போய்விட கூடாது. அதைவிட எனக்கு வருத்தம் தரக்கூடிய விஷயம் வேறு ஒன்றும் இருக்காது. நான் நன்றிக்கெட்டவனாக போகாமால் இருக்க எனது நாவில் எப்போதும் நாமம் வந்துக்கொண்டே இருக்கவேண்டும். அப்படியாவது நான் உன்னிடம் நன்றியோடு இருக்கின்றேனே!’ என்று சொன்னதாக சொன்னார் ஸ்ரீ ஸ்வாமிஜி!

ஸ்ரீ ஸ்வாமிஜி சேங்கனூர் பெருமாள் கோவிலில் 23ஆம் தேதி பிரவசனம் செய்தார். அவர் அருளிய ப்ரவசனத்தைப் அடுத்த இதழில் விரிவாகப் பார்ப்போம்.

நாங்கள் சென்றுகொண்டிருந்த கார் நாங்கூர் பாடசாலையை அடைந்தது. திருநாங்கூரைச் சுற்றி உள்ள திவ்யதேசங்களுள் அருகில் உள்ள ஒரு திவ்யதேசத்தில் ஸ்ரீஸ்வாமிஜியின் வழிகாட்டுதலின்படி திருப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அதைப் பார்த்துவிட்டு உடனே சென்னை திரும்புவதாக ஸ்ரீ ஸ்வாமிஜி கூறினார்கள். நாங்களும் அந்த நாங்கூர் திவ்யதேசத்திற்கு ஸ்வாமிஜியுடன் சென்றோம். திருப்பணி செவ்வனே நடந்துகொண்டிருந்தது. அங்கு, ஸந்நிதிக்கு பெருமாள் தரிசனத்திற்காக ஸ்ரீ ஸ்வாமிஜி சென்றார்கள். ஸந்நிதியில் மூலவரை தரிசனம் செய்தார்கள். உற்சவர் அருகே அழகிய ஒரு சயனத்திருக்கோல கண்ணனை கண்டார். சயனத்தில் ஒரு பாதம் தூக்கியிருக்கும் அவரை தரிசனம் செய்த ஸ்ரீ ஸ்வாமிஜியின் திருமுகத்தில் ஒரு வாட்டம் தெரிந்தது. மெதுவாக அங்கிருந்த பட்டச்சாரியாரை அழைத்து கண்ணனை அருகில் தரிசிக்கவேண்டும் என்று விண்ணப்பிக்க, அவரும் அந்தக் கண்ணனை ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தரிசனம் செய்விக்க, ஸ்ரீ ஸ்வாமிஜியின் மென்மையான இதயம் படபடத்தது. அந்த கண்ணன் புழுதியடைந்த திருமேனியை காட்சி கொடுத்தான். நமது ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு கண்ணனே தனது பாதங்களை தூக்கி காண்பிப்பது போலதான் இருந்தது.

கண்ணனின் புழுதியை சாற்றிய பாதத்தில், குழந்தைக்கு skin disease வந்ததுபோல் ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தோன்றியது. ஸ்ரீ

ஸ்வாமிஜியால் அதைத் தாங்கமுடியவில்லை. கண்ணனுக்கு புளிக்காப்பு செய்வித்து, திருமஞ்சனம் செய்யலாமே என்று கேட்க, பட்டாச்சார்யாரும் சம்மதித்தார். ஸ்ரீ ஸ்வாமிஜிக்கோ அது அப்பொழுதே ஆகவேண்டும் என்று ஆவல்! பாடசாலைக் குழந்தைகளை வரவழைத்து, வெண்ணெய், சந்தனம், பால், அம்சை என்று எல்லாம் மின்னல் வேகத்தில் வந்து சேர, பட்டாச்சார்யாரும் கண்ணனுக்கு புளிக்காப்பு செய்வித்தார். அவனுக்கு திருமஞ்சனம் செய்வித்த பின், அவர் பாதங்கள் பொலிவு பெற்றதை பார்த்த பிறகே ஸ்ரீஸ்வாமிஜி ஒருவாறாக சாந்தியுற்றார். "கண்ணன் ஒரு சிறு குழந்தைபோல் காலைத் தூக்கி, 'எனக்கு உவ்வா பட்டிருக்கிறது பார்' என்று சொல்வதுபோல் இருந்தது" என்று திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டேயிருந்தார். கண்ணனின் திருமஞ்சன திரவியங்கள் வரும்வரை பாடசாலை குழந்தைகளுடன், தாயார் ஸந்நிதியில் ஸஹஸ்ரநாமம் சொன்னோம்.

அன்றிரவு பாடசாலையில் தங்கினோம். அடுத்த நாள் (26.6.2017) காலை, திருமணிக்கூடம் கோவிலில் தீர்த்தவாரி என்று அத்திருக்கோவில் பட்டர் அழைத்ததனால், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களும் நாங்களும் அங்கு சென்றோம். உத்ஸவத்திற்காக உழவார பணிகள் நடந்துகொண்டிருந்தன. பல வருடங்களுக்கு முன், அந்தக் கோவிலின் ஸம்ப்ரோக்ஷணத்தின்போது, அங்கு ஒரு பின்னமான பெருமாள் பூமியின் அடியில் வசித்து வந்தது தெரிந்தது. இவரது பெருமை தெரியாமல் யாராவது இவரை சேதப்படுத்திவிடுவார்களோ என்ற கவலை நம் ஸ்வாமிஜிக்கு. கோவில் நிர்வாகத்தின் ஒப்புதலுடன் மடப்பள்ளியின் முன்பு இருக்கும் சுவர் அருகில் அவர் பிரதிஷ்டை செய்யப்பட்டார். பொது ஜனங்களின் பார்வைக்கு படாததுபோல் அங்கு இருந்தார்.



சுண்ணாம்பு அடிக்கப்பட்ட சுவர், அவர் அருகில் இருந்ததால், அந்தப் பெருமாள் மீதும் சுண்ணாம்புத் துளிகள் பதிந்திருந்தன. அதைக் கண்டு துடித்துப் போனார் ஸ்ரீ ஸ்வாமிஜி. உடனே அதைச் சுத்தம் செய்வதற்காகத் தானே சென்று கிணற்றிலிருந்து நீர் இழுக்கத்தொடங்கினார்! பட்டாச்சார்யார்களின் அனுமதி பெற்று அவர்கள் உதவியுடன் நமது நாங்கூர் பாடசாலை வித்யார்த்திகள் அந்த பெருமாளை சுத்தம் செய்து, ஒரு சிறிய திருமஞ்சனமே நடந்து முடிந்துவிட்டது. அவருக்குத் தைலக் காப்பும் சாற்றப்பட்டது. அந்த ஆதி வரதராஜரின் பால் திருமஞ்சனத்தின்போது, எல்லோராலும் ஒரு அழகிய புன்முறுவலைக் காண முடிந்தது. ஸ்ரீ ஸ்வாமிஜிக்கும் நிம்மதியானது. அந்த கோபுரத்தின் மீது வளர்ந்து வந்த செடிகளை அருகிலிருந்த இளைஞர்களைக் கொண்டு ஒவ்வொன்றாய்ப் பார்த்துப் பார்த்து அப்புறப்படுத்தினார். இதைப் பார்த்த எங்களுக்கும் உண்மையான திருப்பணியின் பொருள் விளங்கிற்று என்று சொல்லவும் வேண்டுமோ?


**ஸ்ரீ ஹரி:**

## மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி கைங்கர்ய சபா (பதிவு)

## ரிக் வேத ஸம்பூர்ண கனபாராயணம்

இடம்: ஸ்ரீ சீதாராம் ஹால், ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயஸ்வாமி கோயில் வளாகம், NRI LAYOUT, கல்கரே, பெங்களூரு

48 வேத வித்வான்களைக் கொண்டு நடைபெற உள்ளது.

தொடர்புக்கு: ப்ரஹ்மஸ்ரீ ப்ரஹ்மானந்த் 944101502, 09940322117

ப்ரஹ்மஸ்ரீ ஆனந்த் 9941790476, 9003268070

ப்ரஹ்மஸ்ரீ வேதராமன் 8148741906, 8526080044

ப்ரஹ்மஸ்ரீ சந்தோஷ் 9003173163



# ஸ்ரீ ப்ரேமிக ஜகந்நாத ரத யாத்திரை, கோவிந்தபுரம்





நாம கீர்த்தனம், சைதன்ய குடீரம், கோவிந்தபுரம், 24 June



ஆண்டு விழா, சிதம்பரம் நாமத்வார், 11 June

ஸ்ரீ ஜகந்நாத ரத யாத்திரை, Atlanta, USA






ஸ்ரீ பூர்ணிமாஜியின் ஸ்ரீமத் பாகவதம் உபன்யாசம், புனே, 19 - 25 June



UDYOG, CHENNAI, 24 JUNE



# செய்திகள்

**மே 31 - ஜூன் 9**
**மதுரபுரி**
**வஸந்தோத்ஸவம், மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்பாக மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு வஸந்தோத்ஸவம் கொண்டாடப்பட்டது. தினமும் மாலை வேளைகளில் ஸ்ரீ ப்ரேமிகவரதன் வித விதமான அலங்காரங்களுடன் அழகாக எழுந்தருள, கீர்த்தனங்கள் பாடப்பட்டன. தினமும் பல்லக்கில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதன் புறப்பாடு கண்டருளினார். எண்ணற்ற பக்தர்கள் இதில் கலந்துகொண்டனர்.**

**ஜூன் 10, 11**
**சிதம்பரம்**
**சிதம்பரம் நாமத்வார் முதலாம் ஆண்டு விழா**
**தில்லை சிதம்பரம் க்ஷேத்திரத்தில் இளமையாக்கினார் கோவில் தெருவில் அமைந்துள்ள சிதம்பரம் நாமத்வாரின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ராதா கல்யாணவைபவம், திவயநாமம் நடைபெற்றன. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் இதில் கலந்துகொண்டார்கள்.**

**ஜூன் 2 - ஜூன் 7**
**சென்னை, நங்கநல்லூர், மதுரமுரளி party ஹாலில் பக்த விஜயம் பற்றி பூர்ணிமாஜி உபன்யாசம் நிகழ்த்தினார்கள். தினமும் 150க்கும் மேற்பட்டவர்கள் பக்த சபரி, சந்த் கபீர்தாஸ், பக்த மீரா, ஸந்த் துளஸீதாஸ், ஸ்ரீ தியாகராஜர், ஆண்டாள் கல்யாணம் பற்றி கதாசிரவணம் செய்தார்கள்.**

**ஜூன் 19 - ஜூன் 25**
**பூனா, வனவாடி, ஜுலேலால் கோயிலில் பூர்ணிமாஜி அவர்களால் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம் நடைபெற்றது. தினமும் 200க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். பூர்த்தி தினத்தன்று ராதா கல்யாண மஹோத்ஸவமும் மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெற்றது.**

**ஜூன் 1 - ஜூன் 7**
**திருத்தணி காந்தி ரோடு, ஸ்ரீ தர்மராஜா கோயிலில் ஏழு நாட்களுக்கு மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை R.கேசவ சர்மா அவர்களால் திருமாலை பற்றி உபன்யாசம் நடைபெற்றது.**

**மே 28**
**திருச்சி நாமத்வாரில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான Lessons from Ramayana என்பது பற்றி நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் முரளிஜி கலந்துகொண்டார்கள். இதில் 80க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தார்கள்.**

**ஜூன் 19 - 28**
**காங்கேயம் அருகில் ஓலப்பாளையம் ஸ்ரீ வானரராஜசிம்மன் திருக்கோயில் - நாமத்வாரில் முரளிஜி அவர்களால் ஸ்ரீமத் ராமாயணம் உபன்யாசம் நடைபெற்றது. தினமும் 200 அன்பர்கள் கலந்துகொண்டனர். பூர்த்திதினத்தன்று சுமார் 300 அன்பர்கள் கலந்துகொண்டது மிகவும் சிறப்பாக இருந்தது.**

**ஜூன் 10 - 16**
**பெங்களூரு அல்ஸூர் ஸ்ரீ சிவசக்தி திருக்கோயிலில் காயத்ரீ, ப்ரியங்கா அவர்களால் தசமஸ்கந்தம் ப்ரவசனமும் நடைபெற்றது.**

**மே 22 - 28**
**கொடுங்கையூரில் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம் கன்யா சகோதரிகளால் நடைபெற்றது. பூர்த்தி தினத்தன்று நகர ஸங்கீர்த்தனமும் ருக்மிணி கல்யாணமும் நடைபெற்றது.**

**ஜூன் 9 - 15**
**விருதுநகர் நாமத்வாரில் கன்யா சகோதரிகளால் ஸ்ரீமத் பாகவத சப்தாஹம் பாராயணமும் ப்ரவசனமும் நடைபெற்றது. பூர்த்தியில் - நகர ஸங்கீர்த்தனமும் ருக்மிணி கல்யாணமும் நடைபெற்றது.**

**June 24**
**GOD India Trust conducted a Career Guidance Workshop with a panel of experts: Dr Yamini Kannappan, Mr Dharaneedharan Durairajan, Dr Kannan Pugazhendi and Mr MV Bhaskar. More than 400 students attended the workshop at Bharatiya Vidya Bhavan, Chennai.**

# கல்ப

# कल्प

## மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை

**- ஸ்ரீ விஷ்ணுப்ரியா**

**'கல்ப' என்ற சொல்லிற்கு ஸம்ஸ்க்ருதத்தில் பலவிதமான அர்த்தங்கள் உள்ளன. அதில் மிகவும் ப்ரஸித்தமானது என்னவென்றால் 'கல்ப' என்ற காலத்தின் ப்ரமாணம். ப்ரம்மாவின் ஒரு நாள்தான் இந்த கல்பம். கல்பகாலம் என்பது மிக மிக நீண்ட காலம் - அதாவது 1,000 சதுர்யுகம். நமது வருஷ கணக்கில் சொல்லப்போனால் 43,20,000 வருஷங்கள் ஆகும் ஒரு கல்பம் என்பது!!**

**அடுத்ததாக 'கல்ப' என்ற சொல்லிற்கு ப்ரபலமான பொருள் - வேதத்தின் ஆறு அங்கத்தில் 'கல்பம்' என்பது ஒன்றாகும். சிக்ஷை, சந்தஸ், வ்யாகரணம், நிருக்தம், கல்பம், ஜ்யோதிஷம் - இவைகள், வேதத்தின் ஆறு அங்கங்களாகக் கூறப்படுகின்றன. அதில், 'கல்ப' என்பது, வேதத்தில் கூறப்பட்டுள்ள சடங்குகளைப் பற்றிச் சொல்வது - அதாவது பிறந்தது முதல், கல்யாணம், சீமந்தம் மற்றும் ஈமை சடங்குகள் வரை செய்யவேண்டிய வைதிகமான கர்மங்களை, அதாவது ப்ரக்ரியைகளை எடுத்துக் கூறி, வாழ்க்கை முறைகளையும் பற்றி விளக்குவது தான் 'கல்பம்' எனும் இந்த வேதாங்கம்.**

**'கல்ப' என்றால் 'CAPABLE', அதாவது, 'செய்யக்கூடிய தகுதி உடைய' என்று அர்த்தம். ஸ்ரீமத் பாகவதத்தில் நாரதர் தனது பூர்வ ஜன்ம கதையைக் கூறும்பொழுது, அந்த ஜன்மத்தில் தனது தாயாரைப் பற்றிக்**

கூறுகிறார். - 'ஸாஸ்வதந்த்ரா ந கல்பாஸீத் யோகக்ஷேமம் மமேச்சதீ' - அதாவது, 'எனது யோகக்ஷேமத்தை அவள் விரும்பியவளாய் இருந்தபோதிலும், ஸ்வதந்த்ரமானவளாக இல்லாததால், அவள் தன்னையும் (என்னையும்) காப்பாற்றிக் கொள்ள முடியாதவளாக இருந்தாள். (ந கல்பா ஆஸீத்)' என்கிறார்.

அதேபோல், கபில தேவஹூதி ஸம்வாதத்திலும், கர்பத்தில் இருக்கும் சிசுவின் நிலையைப் பற்றிக் கூறும்பொழுது - 'அகல்ப: ஸ்வாங்கசேஷ்டாயாம் சகுந்த இவ பஞ்ஜரே'' என்கிறார். ஒரு கூண்டில் அடைப்பட்ட பக்ஷியைப் போல், அந்த சிசு தனது அங்கங்களைக் கூட அசைக்கமுடியாமல் தவிக்கின்றது' என்று பொருள்.

'கல்ப' என்பதற்கு 'SIMILAR' அதாவது 'ஒப்பானது' என்றும் ஒரு பொருள் உண்டு. ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீ க்ருஷ்ணனைப் பற்றிக் கூறும்பொழுது 'வாசா பீயூஷகல்பயா' என்று வருகிறது. அதாவது, 'அம்ருதம் (பியூஷம்) போன்ற பேச்சை உடையவன்' என்று. பியூஷ-கல்பயா என்றால் பீயூஷம். அதாவது, அம்ருதத்திற்கு ஒப்பான என்று பொருள். அதேபோல், 'தேவகல்ப' என்றால் தேவர்களுக்கு ஒப்பான என்றும், 'அக்னிகல்ப' என்றால் அக்னிக்கு ஸமமான அக்னிபிழம்பை போன்ற என்றெல்லாம் பொருள்.

'கல்பவ்ருக்ஷம்', 'கல்பத்ருமம்', 'கல்பதரு' என்ற சொற்கள் எல்லாம், எல்லோரும் அறிந்ததுதான். ஆம்! நாம் விரும்பியதெல்லாம் கொடுக்கக்கூடிய ஸ்வர்கலோகத்தில் இருக்கும் அந்த மரம்தான் கல்பவ்ருக்ஷம். 'ஸுரத்ரு: ஸ்வர்கஸ்ம்பதம்' என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகின்றது. 'கல்பலதிகா' என்று ஒரு கொடியாகவும் அது சொல்லப்படுவதுண்டு.

ஆயுர்வேதத்தில் ஒருவிதமான வைத்யத்திற்கும் 'கல்பம்' என்று பெயர். அது விஷத்திலிருந்தும் விஷக்கடிகளில் இருந்தும் குணப்படுத்தும் வைத்யம். மேலும், ஆயுர்வேதத்தில் 'காயகல்பம்' என்று ஒன்று உள்ளதல்லவா? அது, இந்த உடலை வயோதிகம் அடையாமல் இளமையாகவே வைத்துக்கொள்ள செய்யப்படும் ஒரு வைத்யமுறை ஆகும்.

'கல்ப' என்றால் யோசனை (IDEA) என்று ஒரு பொருள். அதிலிருந்துதான் 'கல்பனை' என்ற சொல் வருகிறது. 'ஸங்கல்பம்', 'விகல்பம்', அதாவது 'நேர் எண்ணம்', 'எதிர் எண்ணம்' என்ற சொற்களும் அதிலிருந்து வருபவைதான். ஒரு வாதத்தில் இரண்டு பக்ஷம் இருக்கும் அல்லவா. அதில் ஒரு பக்ஷத்திற்கு 'கலப' என்று பொருள்.

இப்படியாக இன்னும் எவ்வளவோ அர்த்தங்கள் கொண்ட ஒரு சொல்தான் 'கல்ப' என்ற இச்சொல்.



# இதிஹாச புராணங்கள்

## குழந்தைகளுக்கான சரியான புரிதலில்

**- நிஷா கிரி, ஹூஸ்டன்**

"நான் இராமனை வெறுக்கின்றேன்! யாரோ ஒருவன் தவறுதலாகக் கூறினான் என்பதற்காக, எப்படி இராமன் தன்னுடைய மனைவியைக் காட்டிற்கு அனுப்பினார்? பாவம் சீதை, அவள் எப்படி வருத்தப்பட்டு அழுதாலும் இராமன் அவற்றைக் கருத்தில் கொள்ளவே இல்லை!" என்று, ஒன்பது வயதுடைய 'ரியா' தனது தாயிடம் முறையிட்டாள். இதைக் கேட்ட ரியாவின் தாயார் திகைப்படைந்தாள்.

ஆன்மீகமும் பாரம்பரியமும் மிக்க நம்முடைய சநாதன தர்மத்தைப் பின்பற்றும் பெற்றோர்களாகிய நாம், நம்முடையக் குழந்தைகளும் அதனுடைய மேன்மையை உணர்ந்துப் பின்பற்ற வேண்டும் என்று விரும்புகின்றோம். இதிஹாசம் மற்றும் புராணங்கள் வாயிலாக நாம், நம்பிக்கை, ஆன்மீகம் மற்றும் நம்முடைய சநாதன தர்மத்தின் கோட்பாட்டை அவர்களிடம் விதைத்துவிட முடியும் என்று நம்புகின்றோம். ஆனால், தற்காலத்தில் குழந்தைகள் வளரும் சூழ்நிலை மற்றும் அணுகுமுறையானது முற்றிலும் நாம் வளர்ந்ததற்கு வேறாக உள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டும்! தற்காலத்தில், இப்பொழுது நமக்குக் கிடைக்கின்ற புத்தகங்கள், இணையதளங்கள், ஒலி & ஒளி நாடாக்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்கள் வாயிலாக நாம் கடவுளைப் பற்றி மற்றும் புராணங்களைப் பற்றி நம்முடைய குழந்தைகளுக்குச் சொல்ல முயல்கின்றோம்.

ரியா முதலில் தொலைக்காட்சியில் வரும் இராமாயணத் தொடரை மிகவும் ஆர்வத்துடன் கண்டுவருவதைக் கண்ட அவள் தாய் மிக்க மகிழ்ச்சியுற்றாள். ஆனால், இராமன் சீதையுடன் நடந்து கொண்ட விதத்தைக் கண்டு இராமனை வெறுப்பதாகக் கூறியவுடன் ரியாவின் தாயானவளுக்கு உண்மை நிலைப் புரிந்தது. ரியாவின் தாயாருக்கு, ரியாவின் தவறானப் புரிதல் விளங்கிற்று. ஆனால், அவளுக்கு இராமபிரானின் அணுகுமுறையை எப்படி தன்னுடைய குழந்தைக்குப் புரியவைப்பது என்று தெரியாமல் தவித்தாள்! அவள் என்னதான் செய்வாள்?

நாம் சிறிது சிந்தித்து ஆராய வேண்டியத் தருணம் இது! தற்பொழுது கிடைக்கின்ற இந்தப் புத்தகங்கள் மற்றும் இதர பல. எந்த அளவிற்கு உண்மைத் தன்மையுடனும், நம்பகத் தன்மையுடனும் நம்முடைய சநாதன தர்மத்தையும் இதிஹாச புராணங்களையும் போதிக்கின்றன? இவ்வாறானவற்றை, நாம் நம்முடையக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவதானது ஒரு சம்பிரதாய படிப்பினைக்காகவா? அல்லது அவற்றில் வரும் கதை மற்றும் கதாபாத்திரங்களைப் பற்றிய அறிவிற்காக, ஏதோ பொதுவாக உள்ள, சரிவரக் காட்சிப் படுத்தப்படாத, உண்மைத்தன்மை திரிந்த ஒரு பதிப்பைக் கண்டால் கூடப் பரவாயில்லை என்ற மனோநிலையா? மிக அறிய பொக்கிஷங்களான நமது இதிஹாச புராணங்கள், அவற்றின் உண்மை நிலையிலிருந்து மிகவும் தரம் தாழ்ந்து, ஒரு அமானுஷ்ய மற்றும் புனையப்பட்டக் கதைகளாகவே காட்சிப்படுத்தப்பட்டு, தற்காலத்தில் பெரும்பாலான படைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

நம்முடைய இன்றைய இந்த சரிவு நிலைக்கு முக்கியக் காரணம் என்னவென்றால், மேம்போக்கான வசனங்கள் மற்றும் திரிந்த பொருளுடன் எந்த ஒரு அடிப்படை வேதாந்த அறிவும் இல்லாத எழுத்தாளர்களால் வெளியிடப்படும் புத்தகங்கள்; பரபரப்பான, இதிஹாச புராணங்களை மையப்படுத்திய, திரிந்த பொருள் கொண்ட தொலைக்காட்சித் தொடர்கள்; மேலும், நாம் எல்லோரும் எப்பொழுதும் எந்த ஒரு தேடலுக்கும் நாடிச்செல்லும், அவரவர் கண்ணோட்டத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட எங்கும் வியாபித்திருக்கும் இணையதள பக்கங்கள் (Web Sites), இணைய மன்ற விவாத மேடைகள் (Forums), மற்றும் இணைய பதிவேற்றங்கள் (Blogs). இதில் வருத்தப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், விஷயங்களுக்கு ஆதாரமாகக் கருதப்படும் இவையனைத்தும், இதிஹாச புராணங்களின் முக்கிய செயலான இறைபக்தியை ஒருவர் மனதில் விதைத்தல், அதனை பண்படுத்தி வளர்த்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பதே! எந்தக் கருத்தை வலியுறுத்த வேண்டுமோ அதனைச் செய்யாமலிருக்கும்

இவையனைத்தும் ஒரு வலுவிழந்த ஆதாரங்கள் மற்றும் அவற்றால் ஒரு பயனும் இல்லை. இப்படிப்பட்ட வலுவிழந்த, நம்பகத் தன்மை குறைந்த ஒரு ஆதாரத்திலிருந்து பெறப்பட்ட அறிவைக்கொண்டு ஒரு கேள்வியினை எழுப்புவது என்பது மடமையே! எந்த ஒரு விஷயத்திலும், தேவையானது - ஸாரம் மற்றும் தேவையில்லாதது - அஸாரம் என்று இரண்டு உண்டு. தேவையானவற்றை எடுத்துக் கொண்டு தேவை இல்லாததை விட்டுவிடுதலே மனித அறிவின் உயர்நிலை. இராமாயணத்தைப் போன்ற ஆன்மீகப் படைப்பில் தேவையில்லாதது என்ற ஒன்று இருக்கமுடியாது! அதில் தேவையில்லாத ஒன்று உள்ளது என்று நாம் நினைத்தால், அது, உன்னதமான இறையனுபவத்தை அல்லது லீலையை தரம் தாழ்த்தி, நமது தவறான தாழ்ந்த அணுகுமுறையோடு ஒரு குழம்பிய மனோநிலையில் நாம் புரிந்து கொள்வதே காரணமாகும். மஹான்களின் ஆன்மீகப் படைப்புகளில் ஒரு தேவையற்ற விஷயம் இருப்பதாக நாம் கண்டால் அது நம்முடைய பார்வையில் உள்ள குறைபாடே ஆகும்.

ஒரு குடும்பம் அடுக்குமாடிக் குடியிருப்பின் மூன்றாவது தளத்தில் குடிபெயர்ந்தது. அந்த வீட்டின் சன்னல் கண்ணாடிவழியாகப் பக்கத்திலிருக்கும் குடியிருப்பு பலகணியைக் காணமுடியும். பக்கத்துக் குடியிருப்பில் இருப்பவர்கள், துவைத்தத் துணிமணிகளைப் பலகணியில் உலர வைப்பது வழக்கம். இக்குடும்பத் தலைவியோ, எந்த ஒன்றும் மிகத் தூய்மையாக இருக்கவேண்டும் என்பதில் மிகக் குறியாக இருப்பவள். இப்பெண்மணிக்கு, பக்கத்தில் உலர வைத்திருக்கும் துணியானது எப்பொழுதும் அவ்வளவு தூய்மையாக இருப்பதில்லை என்ற அபிப்ராயம். துவைத்த துணியில் அழுக்கு என்பது அவளுக்கு ஒரு சகிக்கமுடியாத விஷயமாக இருந்தது. இப்படியாக ஒருநாள், சன்னல் வழியாக வெளியில் பார்க்கும்பொழுது எப்பொழுதும் போன்று அழுக்குப் படிந்த துணிகள் இல்லாமல், துணிகள் மிகவும் தூய்மையாக இருப்பதைக் கண்டு ஆச்சர்யமுற்றாள். அவள் கண்களைக் கசக்கியும் தன்னைத்தான் கிள்ளிக் கொண்டு, 'தான்' காண்பது கனவல்ல என்று உறுதிப் படுத்திக் கொண்டாள். அவ்வாறு கண்ட அவளை அத்துணிகள் பார்த்து சிரிப்பதைப் போன்று இருந்தது. அவள் தனக்குள்ளாக, 'அவர்கள் ஒரு புதுப் பணிப் பெண்ணையோ அல்லது ஒரு புதிய துணிதுவைக்கும் இயந்திரத்தையோ வாங்கி இருக்க வேண்டும்', என்று நினைத்துக் கொண்டிருந்தபோது அவளின் கணவன் அங்கு வந்தார். அவர் அவளிடம், 'இப்பொழுது நம் சன்னல் கண்ணாடி மிகத் தூய்மையாக இருக்கின்றது அல்லவா? அது மிகவும் அழுக்கடைந்து இருந்தது. நான்தான் அதனை இன்று காலை தூய்மைப் படுத்தினேன்', என்று பெருமையுடன் சொன்னார். அப்பொழுதுதான் அவளுக்கு விளங்கிற்று, தான் கண்ட அழுக்கு தன்னுடைய பார்வையில் இருந்தது என்று!

பெற்றோர்களாகிய நமக்குத்தான் நம்முடைய குழந்தைகளை இந்தக் கறைபடிந்த எழுத்தாளர்களிடமிருந்தும் தயாரிப்பாளர்களிடமிருந்தும் காக்கும் பொறுப்பு உள்ளது. நம் குழந்தைகள் ஒரு சரியான மூலத்திலிருந்துதான் அறிவினைப் பெறுகின்றார்களா என்பதை நாம் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். உண்மையான மஹான்களே இவற்றிற்கான மூல ஆதாரம். அவர்கள்தான் அந்த இறைவனுடைய இதயம் அறிந்தவர்கள். அவர்களே இறை அனுபவங்கள் மற்றும் லீலைகள் வாயிலாக பக்தியினை மலரச் செய்பவர்கள்.

இராம அவதாரத்தின் முக்கியக் காரணமே, தர்மத்தை நிலைநிறுத்தவும் நல்லொழுக்க வாழ்விற்கான ஒரு உதாரணத்தைக் காட்டவுமே ஆகும். அப்படி இருக்கும்போது, இராமாயணம் எப்படி நல்லொழுக்கத்தை ஒரு கீழ் நிலையில் காட்ட முடியும்?

இராமபிரானும் சீதையும் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு ப்ரேமையை ஒருவர்மீது ஒருவர் கொண்டிருந்தார்கள் என்பதும், அவர்கள் ஒருவரை ஒருவர் முற்றிலும் புரிந்திருந்தனர் என்பதை எல்லோரும் அறிவர். இராவணனால் சீதையானவள் கடத்தப்பட்ட பொழுது, இராமபிரான் மிகவும் துயருற்று, பல இன்னல்களைக் கடந்து, போர்புரிந்து, இந்த உலகத்தில் தன்னால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் செய்து மீட்டார். அப்படிப்பட்ட இராமன், சீதையைத் துறக்க முற்பட்டார் என்பதிலிருந்து அதற்கு ஒரு மிக முக்கிய வலுவானக் காரணம் இருக்க வேண்டும் என்பதை நாம் நேரடியாகவே யூகிக்க முடிகின்றது அல்லவா?

தர்மத்தை மிகவும் கடுமையாகப் பின்பற்றும் இராமபிரான், தன்னுடைய குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் முக்கியத்துவம் கொடுத்தார். மேலும், அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களின் அரசனாக பதில் சொல்லக் கடமைப்பட்டவர் என்பதையும் உணர்ந்திருந்தார். இதுவே, மற்றவர்களைத் தன்னவர்களாகக் கருதுவதின் உச்சம் எனலாம். அதுதான் இராமபிரானின் மிக உன்னதப் பார்வை மற்றும் உயரிய நிலை. சீதா பிராட்டியும் இராமனுக்கு சளைத்தவள் அல்ல. மிகவும் அடக்கமான இல்லத்தரசி. அவளின் மிக உயர்ந்த நிலைக் காரணமாகவே அவள் இராமபிரானின் துணைவியானாள். இந்த நிகழ்வானது அவர்களின் தியாகபுத்திக்கு ஒரு எடுத்துக்காட்டு. சீதா பிராட்டியானவள் இராமனைப் பிரியும் சோகத்தினால் அழுதாளே தவிர, சுய பச்சாதாபத்தினால் அல்ல. இராமபிரானும் தன்னுடைய துயரத்தை எல்லோரும் அறிய வெளிக்காட்டிக் கொள்ளவில்லை என்றாலும், கதவிற்குப் பின்னால் அழுதபடிதான் இருந்தார். என்றாலும், அவர்கள் இருவரும், அவர்களின் தியாக புத்தியினால் துயரத்தைத் தாங்கியே இருந்தார்கள். இந்தத் தியாகமானது வீண்போகவில்லை!

அப்பொழுது கருவுற்றிருந்த சீதா பிராட்டி, தன்னுடைய பேறுகாலத்தை அமைதி தவழும், ஆன்மீகச் சூழ்நிலை நிறைந்த, முனிவர்கள் வாழும் ஆஸ்ரம மத்தியில் கழிக்க எண்ணியிருந்தாள். இராமபிரானும் அந்த வண்ணானுடைய சந்தேகத்தைக் காரணமாகக் கொண்டு, ஒரு அரசனுக்கு உண்டான கடமையை மறக்காமல், சீதையின் விருப்பத்தை நிறைவேற்றினான். வால்மீகியும் பூமிப் பிராட்டியின் புதல்வன்தான் என்பதால், அவருடைய ஆஸ்ரமத்திற்குச் செல்வது சீதைக்குப் பிறந்த வீட்டிற்கு செல்வதற்கு ஒப்பாகும். பிரிவின்போதுதான் உண்மைப் ப்ரேமை நிறைவடையும். எனவே, அதனைக் காட்டவே இருவரும் பிரிந்தனர் எனவும் கொள்ளலாம். அப்படித்தான் கண்ணபிரானும் கோபிகைகளைப் பிருந்தாவனத்தில் விட்டுப் பிரிந்தார்.

இராமனும் சீதையும், ப்ரேமையையும் தர்மத்தையும் நிலை நிறுத்தச் செய்தது ஒரு மிக உயரியத் தியாகம். அவர்கள் ஒருவரை ஒருவர் அனைத்து உண்மைகளும் தெரிந்தே பிரிந்தனர். அதுவே, அவர்களின் உன்னத நிலை! இப்படி, நாம் இதனைப்புரிந்து கொண்டால் அந்த இறைத் தம்பதிகளிடத்து நம்முடைய பக்தியானது மேலும் மேலும் வளரும்! இப்படி, வாழ்க்கையின் தத்துவத்தையும் இறைபக்தியினையும் போதிக்கும் நமது இதிஹாச புராணங்களைச் சரியான கோணத்தில் அறிய அந்த மஹான்களால் மட்டுமே இயலும். அவர்களிடமிருந்து கிடைக்கும் ஞானம்/அறிவே முழுமையான உண்மையான அறிவு! அவர்களிடமிருந்து அல்லது அவர்கள் மூலமாகத்தான் நம் குழந்தைகள் முழுமையான அறிவினைப் பெற்று எவ்வித ஆபத்துமின்றி அனுபவிக்க முடியும்!

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

ஒருவர் என்னிடம் வந்து நீங்கள் அத்வைதியா, விசிஷ்டாத்வைதியா, த்வைதியா என்று கேட்டார். அதற்கு நான், "அந்தந்தச் சித்தாந்தங்களைச் சேர்ந்த வித்வான்களே இதைப்பற்றி கூடி கூடி பேசிக் கொண்டிருக்கிறார்கள். மூன்று மத சித்தாந்தங்களும் இன்றும் இருந்து வருவதால், எது சரி என்று ஒரு முடிவு இன்றுவரை வரவில்லை என்று தெரிகின்றது. அதனால், ஒரு சமயம் ஸ்ரீ ஆதிசங்கரரும், பகவத் ராமானுஜரும், ஸ்ரீ மத்வாசார்யரும் - மூவரும் கூடி ஒரு சபை நடத்தட்டும். அதற்கு வேத வியாசரே அத்யக்ஷராக இருந்து தலைமைவகித்து ஒரு முடிவு சொல்லட்டும். பிறகு சித்தாந்தத்தை முடிவு செய்யலாம். வியாசர் இவர்களுடைய வாதத்தைக் கேட்டு முடிவு சொல்லும் வரை, நாம் தொடர்ந்து மஹாமந்திரம் சொல்லி வருவோம்." என்று சொல்லிவிட்டேன்.

மலைகளின் மீது நம்மால் ஏறிச்செல்லமுடியும். ஆனால், மலைகளின் மீது ஏறுவதற்கு பதிலாக, அவைகளை நமது பயணம் முழுவதும் சுமந்து செல்வதாகக் கற்பனை செய்து பாருங்கள். இப்படிப்பட்ட ஒரு ஆழமான கற்பனையைக் கனடாவில் வாழும் லெபனானைச் சேர்ந்த ஒரு அறிஞர் பரிந்துரைக்கிறார். நமக்கு அருகாமையில் கூட இல்லாத மலைகளை, நாம் சுமந்து செல்வதாகக் கற்பனை செய்யச் சொல்கிறார். தூரத்தில் இருக்கும் மலைகளைத் தூக்கிக்கொண்டு செல்வதற்காக, நாம் அவற்றை உடனே அருகில் கொண்டுவரும்படி சொல்கிறோம். மனதில் நாம் சுமக்கும் கவலைகள், கடந்தகால நிகழ்வுகள், எதிர்காலத்தைப் பற்றிய கற்பனைகள், ஏற்கனவே நாம் செய்து முடித்துவிட்ட முயற்சியின் பலனாக வெளியாகவிருக்கும் ஒரு முடிவைப்பற்றிய பாதுகாப்பில்லாத உணர்வுகள் ஆகியவையே நாம் சுமந்துகொண்டிருக்கும் மலைகளாகும். ஒரு பிரச்சனையிலிருந்து வெளிவருவதற்கு நாம் எடுக்கும் தெளிவான ஒரு நடவடிக்கை, மலை மீது ஏறுவதுபோலாகும். இதுபோன்ற மலைகள் மீது ஏறுவதால் நமக்கு ஏற்படும் அனுபவங்கள் நம்மை அறிஞனாக்கிவிடுகின்றன. இல்லையெனில் நாம் சுமக்கும் மலைகள் நம் மீது கொடுக்கும் அழுத்தத்தினால் நாம் இருக்குமிடம் தெரியாமல் உருக்குலைந்து விடுவோம். மனம் இதுபோன்ற அழுத்தங்களால் தவிக்கும்போது, “நான் மலைகள் மீது ஏறியோ அல்லது கடந்தோ செல்லவதற்கு பதிலாக எதற்காக அதைத் தலையில் சுமந்துகொண்டு திரியவேண்டும்?” என்று உங்களை நீங்களே கேட்டுப்பாருங்கள். எப்போதும் மகிழ்வோடு இருப்போம். நம்மைச் சுற்றிலும் மகிழ்வலைகளைப் பரப்புவோம்.

-M.K.ராமானுஜம்


# சுமைகளை அகற்றுவோம்

# சைதன்ய மஹாப்ரபு - 10

**நிமாயியின் கல்வித்துடிப்பு**

ஓவியர் : பாலமுரளி





படிப்பறிவில்லாத எனக்குச் சுத்தம் எது, அசுத்தம் எது என்று எவ்வாறு அறிவேன்?
எங்கு அமருவது என்று தெரிய வேண்டாமா?
வாய் அடைத்துப்போன சசி, நிமாயி யின் கல்வி துடிப்பை உணர்ந்தாள். இருப்பினும் எந்த முயற்சியும் எடுக்கவில்லை.
மற்றொரு நாள் , நிமாயி தன் கண்ணை கட்டிக்கொண்டு வீடு வீடாக யாசகம் கேட்டான். அவ்வாறே தன் வீட்டுவாசல் முன் நின்று பிக்ஷை கேட்டான். சசிமாதா அங்கு நிமாயியை கண்டதும் அதிர்ச்சி அடைந்தாள்.
அம்மா தாயே ! இந்தக் குருடனுக்கு பிச்சைப் போடுங்கள்!
இதோ வருகிறேன் !
நிமாயி! இவ்வீட்டில் உனக்கு என்ன குறைவு. ஏன் குருடனை போல் வந்திருக்கிறாய்?
ஏன் இவ்வாறு செய்தாய்?
தாயே ! படிப்பறிவில்லாதவன் ஒரு குருடனுக்கு சமம் ஆவான். ஆதலால் நானும் ஒரு குருடன் ஆவேன். படிப்பறிவில்லாதவன் பிச்சை எடுத்துத் தான் பிழைக்க வேண்டும். அதைத் தான் பழகிக்கொள்கிறேன்.
உனது உபநயனத்திற்கும் , கல்விக்கும் விரைவிலேயே ஏற்பாடு செய்கிறோம்
இச்சம்பவங்களினால் நிமாயி கல்வி மேல் இருக்கும் ஆர்வத்தை ஜகந்நாத மிஸ்ரருக்கும் சசி மாதாவிற்கும் உணர்த்தினார்....

# சனாதன புதிர் 98

## ஆத்ரேயன்

**1. அப்பொழுது (அசிரீரி கம்ஸனிடம் சொன்னபொழுது) வஸுதேவர் என்ன சொன்னார்?**
**2. வஸுதேவர்-தேவகி கர்பத்தில் தோன்றிய முதல் குமாரனின் பெயர் என்ன? வஸுதேவர் அந்த குமாரனை என்ன செய்தார்? கம்ஸன் என்ன செய்தான்?**
**3. நாரதர் கம்ஸனை சந்தித்து என்ன சொன்னார்?**
**4. நாரதர் சென்றதும் கம்ஸன் என்ன செய்தான்?**
**5. தன் தந்தையான உக்கிரசேனனை கம்ஸன் என்ன செய்தான்?**
**6. கம்ஸன் யாருடன் சேர்ந்துகொண்டு யாருக்கு துன்பம் விளைவித்தான்?**
**7. கம்ஸனால் துன்புறுத்தப்பட்ட யாதவர்கள் எந்த நாட்டை அடைந்தார்கள்?**
**8. தேவகியின் ஏழாவது கர்ப்பத்தில் யார் தோன்றினார்? பகவான் யோகமாயைக்கு என்ன கட்டளை இட்டார்?**
**9. பிறகு பகவான் யோக மாயையிடம் என்ன சொன்னார்?**
**10.தேவகியின் ஏழாவது கர்ப்பம் என்னவாயிற்று என்று மதுராவாசிகள் பிரலாபித்தார்கள்?**

**<u>பதில்கள்</u>**

**1. தேவகியால் எந்த பயமும் இல்லை. இவளுக்குப் பிறக்கும் குழந்தைகளை கம்ஸனிடம் ஸமர்ப்பித்து விடுவதாகச் சொன்னார்.**

**2. கீர்த்தி மந்தன் - வஸுதேவர், கம்ஸனிடம் அர்பணித்தார் - இந்த குழந்தையால் எனக்கு பயமில்லை. என்னுடைய சாவு எட்டாவது கர்ப்பத்தினால் என்றான் கம்சன் - ஆகவே, வஸுதேவர் குழந்தையை திரும்ப எடுத்துச் சென்றுவிட்டார்.**

**3. வஸுதேவர் முதலிய வ்ருஷ்ணிகள், தேவகி முதலிய யாதவ ஸ்த்ரீகள், நந்தர் முதலிய கோபர்கள் தேவதையின் அவதாரங்கள். கம்ஸன், மற்றும் அவனது உறவினர்கள் அசுரர்கள். பூமிக்கு பாரமாக இருக்கும் அசுரர்களை வதைப்பதற்காக விஷ்ணு செய்யும் முயற்சி.**

**4. தேவகியின் கருவில் தோன்றுவதெல்லாம் பகவான் விஷ்ணு என்று நினைத்து தேவகி வஸுதேவரை வீட்டிலேயே விலங்கிட்டு வைத்து தேவகிக்குப் பிறக்கும் எல்லா பிள்ளைகளையும் விஷ்ணு என்று சந்தேகித்துக் கொன்றான்.**

**5. யாதவர்கள், போஜர்கள், அந்தகர்கள் இவர்களுக்கு அரசனான உக்கிரசேனனை விலங்கிட்டு தானே கம்ஸன் சூரசேன தேசத்தை ஆளனானான்.**

**6. பிரலம்பன், பகன், சாணூரன், திருணாவர்த்தன், மஹாசனன் (அகாசுரன்) முஷ்டிகன், அரிஷ்டன், த்விவிதன், பூதனை, கேசி, தேனுகன் - பாணன், நரகாஸுரன், ஜராஸந்தன் இவர்களுடன் சேர்ந்துகொண்டு யாதவர்களுக்கு தீங்கு செய்தான்.**

**7. குரு, பாஞ்ஜாலம், கேகயம், சால்வம், விதர்ப்பம், நிஷதம், விதேஹம், கோசலம் முதலிய நாடுகள்.**

**8. ஆதிசேஷன் - தேவகியின் வயிற்றில் உள்ள கர்ப்பத்தை, நந்தகோகுலத்தில் இருக்கும் வசுதேவருடைய மனைவியான ரோஹிணியின் வயிற்றில் வைக்க வேண்டும் என்று ஆணையிட்டான்.**

**9. நான் தேவகியின் புதல்வனாக அவதரிப்பேன். நீ யசோதையின் புதல்வியாக தோன்றுவாய். பூவுலகில் மனிதர்கள் உன்னை துர்க்கை, பத்ரகாளி, விஜயா, வைஷ்ணவி, குமுதா, சண்டிகா, கிருஷ்ணா, மாதவி, கன்னிகா, மாயா, நாராயணி, ஈசானி, சாரதா, அம்பிகா என்று ஆராதிப்பார்கள்.**

**10. குறைப் பிரஸவம் - கர்ப்பம் கரைந்துவிட்டது என்று பிரலாபித்தார்கள்.**

# படித்ததில் பிடித்தது

## Ekadasi Fasting and Nobel Prize

Jan 6, 2017
Speaking Tree



**ஏகாதசி உபவாசமும், நோபல் பரிசும்**
**இவை இரண்டுக்கும் என்ன தொடர்பு? மேலே பார்க்கலாம்...**

**இந்த வருடம் மருத்துவத்துறைக்கான நோபல் பரிசை வென்றவர் ஜப்பானைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர். யோஷிநோரி ஓஷூமி என்பவர் ஆவார். "தன்னைத் தான் உண்ணல்" என்ற அவரது ஆராய்ச்சிக்காக அவர் இந்த விருதுக்குத் தகுதி பெற்றுள்ளார். இன்னும் சற்று விளக்கமாகச் சொன்னால், மனித உடலானது தனது அழிந்துவரும் செல்களையும், தேவையற்ற புரதத்தையும் தானே உண்ணும் செயல். இந்தச் செயல் சரிவர நடக்காமல் போவதனால் தேவையற்ற புரதங்களும், கொழுப்புகளும், செல்களும் உடலில் தேங்க ஆரம்பிக்கின்றன. அதுவே அனைத்து விதமான நோய்களுக்கும் காரணமாகிறது. மனித உடலின் இந்தத் தன்னைத் தானுண்ணும் செயல் புற்றுநோயைத் தடுப்பதிலும், அதனுடன் போராடுவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.**

நமது பாரதத்தில் பண்டையக் காலங்களில் மாதம் இரு முறை ஏகாதசி உபவாசம் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. இன்றும் பலர் அதன் அறிவியல் ரீதியான நன்மைகளை அறியாமலும், அதன் மருத்துவ குணங்களை அறியாமலும், தெய்வீகம் பொருந்திய நாளென்று மட்டும் கருதி உபவாசம் இருந்து வருகின்றார்கள். மாதமிருமுறை உபவாசம் இருப்பது மேற்சொன்ன தன்னைத் தானுண்ணும் செயலை ஊக்குவித்து, தேவையற்ற புரதங்களைக் குறைத்து நமக்கு நோய் வராமல் தடுக்கின்றது. எப்போதெல்லாம் விஞ்ஞானிகள் ஏதாவது ஒன்றை நிரூபிக்க முயல்கிறார்களோ அப்போது, அவர்கள் தம்மையும் அறியாமல் நாம் பின்பற்றிவரும் கலாசாரத்தின் ஏதோ ஒரு பழக்கத்திற்கு விஞ்ஞான ரீதியான விளக்கத்தையும், சான்றையும் தந்துவிடுகின்றார்கள்.

பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை ஒரு நாள் முழுவதும் எதுவும் உண்ணாமல் உபவாசம் இருந்து, இறைவனைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருப்பதால், மனம் புத்துணர்வு அடைகிறது. உடலுக்கும் தன்னைத் தானே சரி செய்து கொள்ள அவகாசம் கிடைக்கிறது.

நமது முன்னோர்கள் உடலையும் மனத்தையும் புத்துணர்வடையச் செய்யவே இந்த ஏகாதசி உபவாசத்தைக் கடைப்பிடித்து வந்திருக்கின்றனர். ஆன்மீகத்தில் உயர்ந்த நிலையை அடைவதற்கு, உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வது மிக மிக அவசியமாகும். நமது முன்னோர்களின் இந்த நுணுக்கமான அறிவைக்கண்டு மனம் வியப்பில் ஆழ்வதோடு, அவர்களின் ஞானத்திற்குத் தலை வணங்குவோமாக!

HUMBLE PRANAMS AT
THE LOTUS FEET OF GURUJI
DR SHRIRAAM MAHADEVAN
Consultant Endocrinologist
Endocrine & Speciality Clinic
Sri Ganesh Flats, Flat no.4, Ground floor,
Old no.72, New No. 460,T.T.K. Road, Alwarpet,
Chennai 600018
Tel: 044-24350090, Mob: 9445880090
Email: mshriraam@gmail.com
www.chennaiendocrine.com

| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| 4 ஜூலை 2017 | ஏகாதசி |
| 9 ஜூலை 2017 | குரு பூர்ணிமா |
| 19 ஜூலை 2017 | ஏகாதசி |

## அறிவிப்பு

அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Email:
helpdesk@madhuramurali.org
Ph: "24895875"
SMS '9790707830'

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி

Dr.A.BHAGYANATHAN,
Personal Secretary to
HIS HOLINESS
SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No 11, Door No 4/11,
Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email :
contact@namadwaar.org

மதுரமுரளீ


- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.



காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஜயந்தி உத்சவம்,
மதுரபுரி ஆஸ்ரமம், 8 June



Registered with The Registrar of Newspapers for India
R.No 62828/95
Regd. No. TN/CC(S)DN/119/15-17

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month
Licensed to post without prepayment
WPP No. TN/PMG(CCR)WPP–608/15-17



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai – 83 and Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar